05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# வில்லி பாரதத்தில் கண்ணனின் ஆளுமைப் பண்புகள்
# PERSONALITI KANNAN DALAM EPIK VILLI BHAARATHAM

**ரேவதி த/பெ சந்திர சேகரன்**
**REVATHY A/P CHANDRA SEHKARAN**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம்**
**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

**2021**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**வில்லி பாரதத்தில் கண்ணனின் ஆளுமைப் பண்புகள்**

ரேவதி த/பெ சந்திர சேகரன்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**இந்த ஆய்வானது தமிழ்மொழிக் கல்வியியல் முதுகலைப் பட்டத்தைப் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது**

**தமிழ்மொழிப் பிரிவு, தற்கால மொழிகள் துறைமொழிகள் மற்றும் தொடர்பியல் புலம்**
**சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம்**
**2021**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**PERSONALITI KANNAN DALAM EPIK VILLI BHAARATHAM**

**REVATHY A/P CHANDRA SEHKARAN**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**DISERTASI INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA SASTERA (MOD PENYELIDIKAN)**

**FAKULTI BAHASA DAN KOMUNIKASI**
**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


UPSI/IPS-3/BO 32
Pind : 00 m/s: 1/1

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**Sila tanda (√)**

| | |
|---|---|
| Kertas Projek | |
| Sarjana Penyelidikan | / |
| Sarjana Penyelidikan dan Kerja Kursus | |
| Doktor Falsafah | |

**INSTITUT PENGAJIAN SISWAZAH**

**PERAKUAN KEASLIAN PENULISAN**

Perakuan ini telah dibuat pada

**i. Perakuan Pelajar :**

Saya, REVATHY A/P CHANDRA SEHKARAN, M20142002404, FAKULTI BAHASA DAN KOMUNIKASI dengan ini mengaku bahawa disertasi/tesis yang bertajuk PERSONALITI KANNAN DALAM EPIK VILLI BHARATHAM adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

Tandatangan pelajar

**ii. Perakuan Penyelia :**

Saya FRANKLIN THAMBI JOSE. S dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk PERSONALITI KANNAN DALAM EPIK VILLI BHARATHAM dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada Institut Pengajian Siswazah bagi memenuhi sebahagian/sepenuhnya syarat untuk memperoleh SARJANA SASTERA (KESUSASTERAAN TAMIL) PENYELIDIKAN .

TARIKH

21/6/2021

TANDATANGAN PENYELIA

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



UPSI/IPS-3/BO 31
Pind.: 01 m/s:1/1

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**INSTITUT PENGAJIAN SISWAZAH**
***/INSTITUTE OF GRADUATE STUDIES***

## BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK

### *DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM*

Tajuk / *Title*: PERSONALITI KANNAN DALAM EPIK VILLI BHAARATHAM

No. Matrik /*Matric's No.*: M20142002404

Saya / *I* : REVATHY A/P CHANDRA SEHKARAN
(Nama pelajar / *Student's Name*)

mengaku membenarkan Tesis/Disertasi/Laporan Kertas Projek (Kedoktoran/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
*acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   *The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris*

2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   *Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.*

3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   *The Library has the right to make copies of the thesis for academic exchange.*

4. Sila tandakan ( √ ) bagi pilihan kategori di bawah */ Please tick ( √ ) for category below:-*

| | | |
|---|---|---|
| ☐ | **SULIT/*CONFIDENTIAL*** | Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972* |
| ☐ | **TERHAD/*RESTRICTED*** | Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restircted information as specified by the organization where research was done.* |
| / | **TIDAK TERHAD / *OPEN ACCESS*** | |

DR. FRANKLIN THAMBI JOSE.S (PhD)
PENSYARAH KANAN
FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
PERAK, MALAYSIA

(Tandatangan Pelajar/ Signature)

(Tandatangan Penyelia / *Signature of Supervisor*) & (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

Tarikh: 21/6/2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# நன்றியுரை

சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப் படிப்பிற்காக 'வில்லி பாரதத்தில் கண்ணனின் ஆளுமைப் பண்புகள்' என்னும் தலைப்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுப் பணி இனிதே நிறைவேற திருவருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவன் திருவடியைச் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன். முதலில் என் அன்புக்குரியச் சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் திரு. பிரங்களின் தம்பி ஜொஸ் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாய்வை உருவாக்குவதற்கு எனக்கு வேண்டிய அளவு ஊக்கமளித்து ஆதரவு நல்கிய நல்லுள்ளம் என்று இவரைக் குறிப்பிடலாம். ஆய்வு மேற்கொள்வதற்கு வாய்ப்பு நல்கியதோடு, ஆய்வுக் காலங்களில் நான் சந்திக்கச் சென்றபோதெல்லாம் என்னை இன்முகத்தோடும், கனிவோடும், பரிவோடும் வரவேற்று ஆய்வின் ஆழ அகலங்களையெல்லாம் தெள்ளத் தெளிவாக்கி, ஆய்வு செம்மையுற பேருதவி புரிந்ததோடும், வாழ்விற்குத் தேவையான நல்ல கருத்துகளையும், சிந்தனைகளையும் கூறி, வழி நடத்தும் முனைவர் அவர்களுக்கு மனமகிழ்ந்த நன்றிகளைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழக நூல்நிலையத்திற்கும் இவ்வேளையில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்விற்குத் தேவையான நூல்களைக் கொடுத்து உதவிய பல்கலைக்கழக நூலகத்தார் அனைவருக்கும் என் நன்றிகளை உரிதாகும். மேலும், எனக்குத் தேவையான கருத்துகளைத் தேடுவதற்கு உதவியாக இருந்த மலாயாப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பிரிவு நூல்நிலையத்திற்கு எனது நன்றிகள். அதுமட்டுமன்றி, எனக்கு வழிகாட்டிய என் பெற்றோர்கள் திரு.திருமதி சந்திரசேகரன் சாரதா அவர்களுக்கும், கணவர் திரு.தாஸ் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனக்குத் தெரியாதவற்றைக் கேட்கும் பொழுது அதை எனக்குப் புரியும் வரை விளக்கமளித்தனர் என்னைத் தெளிவுப்படுத்திய என் சக நண்பர்களுக்கும் இவ்வேளையில் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக, இவ்வாய்வு சிறப்புடன் நிறைவு பெற பல வழிகளில் உதவி நல்கிய அனைத்து நல்லுள்ளங்களையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

ரேவதி த/பெ சந்திர சேகரன்
M20142002404
சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ஆய்வுச் சாரம்

உலகப் பெரும் இதிகாசங்களுள் பாரதம் அளவில் மிகப் பெரியதாகக் கருதப்படுகிறது வில்லி பாரதத்தில் பாத்திரப்படைப்புகளுள் ஒன்றாக அமைவது கண்ணன் அவதாரம் ஆகும். இந்த ஆய்வு வில்லி பாரதம் பாடல்களில் கண்ணன் ஆளுமைகளை அடையாளம் காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஆய்வு எய்ஸென்க் ஆளுமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. வில்லி பாரதத்தில் கண்ணன் ஆளுமைகளை அடையாளம் காண மொத்தம் 600 பாடல்கள் பயன்படுத்தப்பட்டன. கண்ணனின் ஆளுமையை விரிவாக அறிய ஆளுமைக் காரணிகளும் ஆய்வு செய்யப்பட்டன. மேலும், வில்லி பாரதத்தின் இயல்புகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த ஆய்வு விளக்கமுறை அணுகுமுறையும், பகுப்பாய்வு அணுகுமுறையும் கொண்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வில் கண்ணன் புறமுகத்தன்மை, நரம்புத்தன்மை, உளத்தடுமாற்றத்தன்மை ஆகிய மூன்று வகை ஆளுமைகளையும் கொண்டுள்ளார். புறமுகத்தன்மையயில் கண்ணன் மூன்று வெவ்வேறு ஆளுமைப் பண்புகளையும், உளத்தடுமாற்றத்தன்மையில் ஏழு வெவ்வேறு ஆளுமைப் பண்புகளையும் கொண்டுள்ளார். கண்ணனின் நரம்புத்தன்மை பார்த்தோமானல், அவர் தாழ்வு நரம்புதன்மை வகையே அதிகமாகச் சார்ந்துள்ளார். கண்ணனிடம் நிலையான உணர்ச்சியே கொண்டுள்ளதை இந்த ஆய்வின் வழி அறியலாம். இந்த ஆய்வு மனித ஆளுமையின் பண்புகள் மற்றும் ஒரு நபரின் ஆளுமைச் சிதைவுக்காக காரணிகள் பற்றிய ஆழமான ஆய்வுக்கு ஒரு அடிப்படையாக அமையும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# PERSONALITI KANNAN DALAM EPIK VILLI BHAARATHAM

## ABSTRAK

Objektif kajian ini adalah untuk mengenal pasti ciri khas *Villi Bhaaratham*, menganalisis personaliti Kannan dalam epik *Villi Bhaaratham* dan menganalisis faktor-faktor yang mempengaruhi personaliti Kannan dalam epik *Villi Bhaaratham* yang dinyanyikan oleh Villi Putthurar. Kajian ini berdasarkan kaedah penyelidikan kualitatif dan data-data untuk kajian ini telah dikumpulkan melalui pendekatan deskriptif dan analitik. Teori Personaliti Eysenck digunakan dalam kajian ini. Teori ini terdiri daripada banyak tret termasuk Ekstroversi, Neurotikisme, Psikotisme dan beberapa lagi. Sebanyak 600 teks digunakan untuk mengenal pasti personaliti Kannan dalam epik *Villi Bhaaratham*. Semua teks dianalisis menggunakan Teori Personaliti Eysenck. Faktor-faktor yang mempengaruhi personaliti Kannan dalam epik Villi Bhaaratham juga dianalisis secara terperinci dalam kajian ini. Dapatan kajian telah menunjukkan bahawa Kannan memiliki personaliti iaitu tret Extroversi, Neurotikisme dan Psikotisme. Dalam tret Extroversi, Kannan memiliki tiga personaliti berbeza, manakala dalam tret Psikotisme, Kannan memiliki tujuh personaliti berbeza. Manakala bagi tret Neurotikisme Kannan berada pada tahap yang rendah di antara kelima-lima tret personaliti. Hasil kajian menyimpulkan bahawa Kannan dalam epik *Villi Bhaaratham* yang dinyanyikan oleh Villi Putthurar mempunyai personaliti yang berbeza. Implikasi kajian menunjukkan bahawa faktor-faktor persekitaraan, biologi dan psikologi yang tinggi dapat mempengaruhi ganguan psikologi seseorang individu. Kajian yang lebih komprehensif perlu dilaksanakan dalam kalangan tret personaliti manusia berbeza untuk melihat secara mendalam tentang dan faktor yang secara terperinci.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**PERSONALITY OF KANNAN IN EPIC VILLI BHAARATHAM**

## ABSTRACT

The objectives of the study were to identify the special features of *Villi Bhaaratham*, to analyse personality of Kannan in epic *Villi Bhaaratham* and to analyse the factors influencing the personality of Kannan in epic *Villi Bhaaratham* sung by Villi Putthurar. This study was based on qualitative method of research and the data were collected through descriptive and analytical approaches. Eysenck's Personality theory was used in this study. This theory consists of many traits including Extroversion, Neuroticism, Psychotism and some more. A total of 600 texts were used to identify the personality of Kannan from the epic *Villi Bhaaratham*. All the texts were analysed using the Eysenck's Personality theory. Moreover, the factors influencing the personality of Kannan in epic *Villi Bhaaratham* were analysed. The findings of the study showed that the personality of Kannan has traits namely Extroversion, Neuroticism, Psychotism traits. In Extroversion trait, Kannan has three different personalities, in Neuroticism trait, has five different personalities and in Psychotism trait, Kannan has seven different personalities. The study concluded that Kannan in epic *Villi Bhaaratham* sung by Villi Putthurar has different personalities. The study implicated that high environmental, biological and psychological factors can influence an individual's psychological disorders. More comprehensive studies need to be conducted among different human personality traits to look in depth about the factors in detail.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# பொருளடக்கம்

**பக்கம்**


| | |
|---|---|
| **ஆய்வாளர் உறுதிமொழி** | ii |
| **நன்றியுரை** | iv |
| **ஆய்வுச் சுருக்கம்** | v |
| **ABSTRAK** | vi |
| **ABTRACT** | vii |
| **பொருளடக்கம்** | viii |
| **அட்டவணைப் பட்டியல்** | xii |
| **வரைபடப் பட்டியல்** | xiii |
| **குறிவரைவு பட்டியல்** | xiv |
| **சுருக்கக் குறியீட்டு விளக்கம்** | xv |
| **இயல் 1 : அறிமுகம்** | |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 4 |
| 1.3 ஆய்வின் சிக்கல் | 7 |
| 1.4 ஆய்வின் முக்கியத்துவம் | 10 |
| 1.5 ஆய்வின் நோக்கம் | 11 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



1.6 ஆய்வின் வினா 12

1.7 ஆய்வு எல்லை 12

1.8 ஆய்வு ஆதாரம் 13

1.8.1 முதன்மை ஆதாரம் 13

1.8.2 துணை ஆதாரம் 13

1.9 ஆய்வின் முக்கியச் சொற்களின் விளக்கம் 14

1.9.1 வில்லி பாரதம் 14

1.9.2 ஆளுமை 15

1.9.3 கண்ணன் 19

1.10 தொகுப்புரை 23

**இயல் 2 : முந்தைய ஆய்வுகள்**

2.1 முன்னுரை 24

2.2 முந்தைய ஆய்வு 25

2.3 முந்தைய ஆய்வுக்கு இவ்வாய்வுக்கும் உள்ள தொடர்பு 39

2.4 தொகுப்புரை 40

**இயல் 3 : ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 41

3.2 ஆய்வின் வடிவமைப்பு 42

3.3 ஆய்வு அணுகுமுறை 44

3.4 தரவுச் சேகரிப்பு முறை 44

3.5 தரவுப் பகுப்பாய்வு முறை 45

3.6 ஆய்வுக் கோட்பாடு 45

3.7 ஆய்வுக் கட்டமைப்பு 52


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


3.8 ஆய்வு நடைமுறை 53

3.9 தொகுப்புரை 53

இயல் 4 : பகுப்பாய்வு மற்றும் கண்டுபிடிப்புகள்

4.1 முன்னுரை 54

4.2 பகுப்பாய்வு 55

4.2.1 வில்லி பாரதத்தின் தனித்தன்மைகளை அடையாளங்காணுதல் 55

4.2.1.1 வில்லிபாரத நூல் 57

4.2.1.2 வில்லிபாரத நூலாசிரியர் 73

4.2.13 வில்லிபாரதத்திற்கு முன் இயற்றிய காப்பியஙகள் 84

4.2.2 வில்லி பாரதப் பாடல்களில் கண்ணனின் ஆளுமைப் பண்புகள் எய்ஸென்க் கோட்பாட்டின் அடிப்படையின் வழி அடையாளங் கண்டு வகைப்படுத்துதல் 95

4.2.2.1 முகத்தன்மை 95

4.2.2.1.1 தலைமைத்துவம் 95

4.2.2.1.2 இணங்கி பழகுதல் 109

4.2.2.1.3 எழுச்சி 116

4.2.2.2 உளத்தடுமாற்றத்தன்மை 120

4.2.2.2.1 வல்ல நடத்தை 120

4.2.2.2.2 நம்பிக்கை 126

4.2.2.2.3 சமாதானம் 129

4.2.2.2.4 ஆழ்சிந்தனை 132

4.2.2.2.5 சாந்தம் 153

4.2.2.3 வில்லிபாரதப் பாடல்களில் கண்ணன் ஆளுமைப் பண்புகளை ஆராய்தல் 159

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.2.3 வில்லி பாரதப் பாடல்களில் கண்ணனின் ஆளுமைக்கான காரணிகளை ஆராய்தல் 161

4.2.3.1 உயிரியல் காரணிகள் 162

4.2.3.1 சமூகவியல் காரணிகள் 166

4.2.3.1 உயிரியல் காரணிகள் 175

4.3 தொகுப்புரை 178

**இயல் 5 : ஆய்வு முடிவு**

5.1 முன்னுரை 179

5.2 ஆய்வுத் தொகுப்புரை 179

5.3 ஆய்வு முடிவு 182

5.4 ஆய்வுப் பரிந்துரைகள் 185

5.5 இந்த ஆய்வில் கிடைக்கப்பெற்ற இதர கருத்துக்கள் 186

5.6 தொகுப்புரை 190

**மேற்கோள் நூல்கள்** 191

**பின்னிணைப்பு** 196

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# அட்டவணைப் பட்டியல்

**அட்டவணை எண்** **பக்கம்**

1.1 வில்லிபாரதம்-10 பருவங்கள் 12

4.1 கண்ணன் ஆட்கொள்ளும் சூழல் 76

4.2 தலைமைத்துவப் பண்புகள் 96

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## வரைபட பட்டியல்


| வரைபட எண் | பக்கம் |
|---|---|
| 3.1 ஆய்வு வடிவமைப்பு | 43 |
| 3.3 எய்ஸென்க் ஆளுமைக் கோட்பாடு | 51 |
| 3.4 ஆய்வுக் கோட்பாட்டுக் கட்டமைப்பு | 52 |
| 3.5 ஆய்வு நடைமுறை(ஆய்வு மேற்கொள்ளம் படிநிலையின் விளக்கம்) | 53 |
| 4.1 வில்லிபாரத தனித்தன்மைகள் | 56 |
| 4.2 எய்ஸென்க் கோட்பாட்டில் கண்ணனின் ஆளுமைப் பண்புகள் | 159 |
| 4.3 ஆளுமைக்கான காரணிகள் | 161 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# குறிவரைவு பட்டியல்


| குறிவரைவு எண் | பக்கம் |
|---|---|
| 4.1 கண்ணனின் புறத்தன்மை பண்புகள் | 119 |
| 4.2 கண்ணனின் உயர் உளத்தடுமாற்றத்தன்மை | 156 |
| 4.3 கண்ணனின் தாழ்வு உளத்தடுமாற்றத்தன்மை | 157 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| பி.அ | பின்னிணைப்பு அட்டவணை |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

# அறிமுகம்

## 1.1 முன்னுரை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பாரத நாடெங்கும் மிகப் பழைய காலந்தொட்டுப் பரவி நிலைபெற்று வந்துள்ள கதைகள் பாரதமும் இராமாயணமும் ஆகும். இந்த இரு பெரு நூல்களும் 'இதிகாசம்' என்று சிறப்பித்துக் கூறப்படுவன. இப்பெரிய இதிகாசத்தின் பெருமை கருதி இதனை 'மகாபாரதம்' என்றும், 'மாபாரதம்' என்றும் சிறப்பித்துக் கூறிவருகின்றனர். பகவத் கீதையின் தோற்றத்திற்கு நிலைக்களமாய் அமைந்தது பாரதப் போர் என்பர். வடமொழியில் தோன்றிய இந்தப் பெருநூல்களைப் பாரத நாட்டு மொழிகள் பலவற்றில், கவிதை வடிவிலும் பிறவாறாகவும், மொழிபெயர்த்தும், சுருக்கியும், அங்கங்கே வழங்கிய புதிய கதைகளை உடன் பிணைத்தும், நாட்டு நடப்பு, சூழ்நிலை முதலியவற்றிற்கு ஏற்பச் சிற்சில மாறுதல்கள் செய்தும், புலவர் பெருமக்கள் பற்பல காலங்களில் ஆக்கி வந்துள்ளார்கள் (இராஜாராம், 2010:5).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


*'மாயன் அன்று ஐவர் தெய்வத் தேரினில் செப்பிய கீதையின் செம்மைப் பொருள் தெரியப் பாரினில் சொன்ன இராமாநுசன்'*

*(இராமாநுச நூற்றந்தாதி,ப.68)*

வேதமாகிய பெருங்கடலைப், பேரறிவாகிய மத்தினால் கடைந்ததனால், மகாபாரதம் ஆகிய வேவாமிர்தம் வெளி வந்ததாகச் சான்றோர் கூறுவர். அதனால் தான் இந்நூல் வேதம் என்னும் பெயர் சொல்லப்படுகிறது. மகாபாரத்தை நான்கு வேதங்களுக்குப் பிறகு ஐந்தாவது வேதமாக வைத்து 'பஞ்சமோ வேத' என்று அழைத்தனர். வேதமோ ஞான காண்டம், கர்ம காண்டம் என்று இரு வகையாகப் பிரிந்திருக்கிறது. வேதத்தில் உள்ள ஞான காண்டம் போலவே, பாரதத்திலுள்ள பகவத் கீதை என்பதும் ஞான காண்டமாகும் (இராஜாராம், 2010:8).

'வேதநான்கினை விரித்த மெய்ச்சுடர்' என்று போற்றப்படுவர் வியாசர். நான்கு வேதங்களையும் ஒழுங்குபடுத்திய பெருமை வியாசருக்கே உரியது. வேதங்கள் ஒழுங்குபடுத்தியதால் வந்த பெயரே வேதவியாசர் என்பதாகும். 'வேதநெறிக்கு இடையூறு தோன்றிய காலத்தில் அதனைத் தீர்க்கும் பொருட்டு அவதரித்தவர் வியாசர் என்பர்' (லஷ்மணன், 2005:3). வேதங்கள் அசுரர் கவர்ந்து சென்றபோது திருமால் மச்சாவதாரம் எடுத்து வேதங்கள் மீட்டார். பின், வேதங்களையும், அவற்றின் அடிப்படையான உபநிடதங்களையும் அறிஞர்கள் தவறாகப் புரிந்து கொண்டு தாம் கண்டவற்றைத் தரிசனங்கள் என்ற பெயரால் எழுதி வெளியிட்டார். கடவுள் இல்லை என்று சில தரிசனங்கள் கூறின. இதனால் தொன்றுதொட்டு மக்களால் பின்பற்றப்பட்டு வரும் வேதமதமாகிய சனாதனதர்மமே அழிந்து போகும் நிலை தோன்றியது (அகிலா, 2012:58).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இந்நிலையில் வியாசர் தோன்றி வேதங்களின் உண்மை நிலையை நிலைநிறுத்தினார். ஆறாவதாக ஒரு தரிசனம் செய்தார். அது வேதாந்தம் எனப்படும்.

*சாரந் திரத்தின் மிக்க தபோதனன் சதுர்வே தங்கள்*
*பாரதம் தன்னோடு ஐந்தாம் படியினாம் பகர்ந்த மூர்த்தி*
(ஆதி பருவம்.,பா.503)

என்று வியாசரைப் போற்றுகிறது வில்லிபாரதம். வேதாந்தத்தின் எதிரொலியாக அமைவது பிரம்ம சூத்திரம். வியாசர் பிரம்ம சூத்திரத்தின் கருத்தை எளிதாக்க, கண்ணபிரான் அருச்சுனனுக்குப் போர்க்களத்தில் உபதேசித்த கீதையின் பொருள் விளங்க மகாபாரதத்தையும், பதினெண்புராணங்களையும் எழுதினார். இதனால் வேதமதம் இன்றளவும் வாழ்கிறது. வேதங்களை அழியாதபடி மீட்ட காரணத்தால் வேதவியாசர் திருமாலோடு ஒப்பிடப்பெறுவார். எனவே வியாசர் காட்டிய வழிகளுள் ஒன்றாக அமைவது பாரதம் (அகிலா, 2012:60).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

*நீடு ஆழி உலகத்து மறை நாலொடு ஐந்து என்று நிலைநிற்கவே*
*வாடாத தவ வாய்மை முனிராசன் மாபாரதம் சொன்ன நாள்*

*(*வில்லி பாரதம்*,* சிறப்பாயிரம்*- 1)*

என வில்லி பாரதத்தின் சிறப்புப் பாயிரப் பாடல் புகழ்தலும் கவனிக்கத்தக்கது. ஆக, பாரதத்தை நான்கு வேதங்களோடு ஒக்க வைத்து ஐந்தாம் வேதம் என்று மக்கள் போற்றி வந்துள்ளார்கள்.

இந்தியத் துணைக்கண்டப் பண்பாட்டைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த இதிகாசம் இந்து சமயத்தின் முக்கியமான நூல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது (கணபதி,1976:16). அறம், பொருள்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இன்பம், வீடுபேறு என்னும் மனிதனுடைய நால்வகை நோக்கங்களையும், சமூகத்துடனும், உலகத்துடனும் தனிப்பட்டவருக்கு உரிய உறவுகளையும், பழவினைகள் பற்றியும் இது விளக்க முற்படுகின்றது. பாண்டு, திருதராட்டிரன் என்னும் இரு சகோதரர்களின் பிள்ளைகளிடையே இடம் பெற்ற பெரிய போரை மையமாக வைத்து உருவாக்கப்பட்டதே இந்தக் காப்பியமாகும் (இராஜாராம், 2010:15).

இக்காப்பியங்களில் ஒவ்வொரு பாத்திரமும் தனித்தனி பண்புநலன்களை அதாவது ஆளுமைகள் கொண்டுள்ளதைப் பாரத்தில் வழி காணலாம். ஒருவரின் ஒழுங்கமைந்த, இயங்கியல் பண்புகளும், அவை தோற்றுவிக்கும் தோரண நடத்தைகள், உணர்வுகள், சிந்தனைகளையும் இக்காப்பியத்தில் உளவியல் ரீதியாக அதிகளவில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பொது வழக்கில் ஆளுமை என்பது ஒருவரின் வெளித் தோற்றத்தைப் பெரிதும் குறிக்கிறது. அத்துடன் உளவியல் ஆளுமை ஒருவரின் உள்ளிருந்து உருவாகி அவருடைய வாழ்க்கைக் காலம் முழுதும் சீராக அமைகின்றது (நாகராஜன். சீத்தராமன், 2012:330).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆக, ஐந்தாம் வேதமாகிய வில்லி பாரதத்தில் கண்ணனின் ஆளுமை பண்புகள் கூறப்பட்டுள்ளனதா என்பதை ஆராய்வதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

**1.2 ஆய்வுப் பின்னணி**

வியாச முனிவர் சொல்ல விநாயகர் எழுதியதாக மகாபாரதம் கூறுகிறது. இது சமஸ்கிருதத்தில் இயற்றப்பட்டுள்ளது. இது 74,000க்கு மேற்பட்ட பாடல் அடிகளையும், நீளமான உரைநடைப் பத்திகளையும் கொண்டு விளங்கும் இந்த

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆக்கத்தில் 18 இலட்சம் சொற்கள் காணப்படுகின்றன (இராஜாராம், 2010:20). இதனால் இது உலகின் மிக நீண்ட இதிகாசங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது இலியட், ஒடிஸ்சி ஆகிய இரண்டு இதிகாசங்களும் சேர்ந்த அளவிலும் 10 மடங்கு பெரியது. தாந்தே எழுதிய தெய்வீக நகைச்சுவை (Divine Comedy) என்னும் நூலிலும் ஐந்து மடங்கும், இராமாயணத்திலும் நான்கு மடங்கும் இது நீளமானது. இது உலகின் மிக நீண்ட இதிகாசங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது (நாராயணவேலுப்பிள்ளை, 1994:9).

வியாச பாரதம் பதினெட்டுப் பருவங்களைக் கொண்டு மிக விரிந்த நூல் ஆகும். அதில் பாரதக் கதையோடு எத்தனையோ கிளைக் கதைகளும் வேறு பல இடைப்பிறவரல்களும் உள்ளன. அதனை முற்றக் கற்றுப் பாரதக் கதையைப் புரிந்து கொள்ளுதல் எளிய செயலன்று. ஆகவே, பாரதக் கதையை யாவரும் எளிதில் உணருமாறு சுருக்கமாகச் செந்தமிழில் அமைக்க முற்பட்டுப் பாரத்தைத் தமிழில் மூன்று புலவர்கள் பாடியுள்ளனர் (நாராயணவேலுப்பிள்ளை, 1994:12).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அவர்களும் பாரதம் பாடிய பெருந்தேவனார் காலத்தால் முற்பட்டவரார். இவர் கடைச் சங்க புலவராவர். இவர் பாரதக் கதையைத் தமிழில் உரை நடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இயற்றினார். பின் கி.பி 9 ஆம் நூற்றாண்டில் இந்தப் பெயரைக் கொண்ட மற்றொரு புலவர் பாரதக் கதையைத் தமிழில் இயற்றினார். இவர் இயற்றிய நூலில் பெயர் பாரத வெண்பா என்றும் ஆசிரியரின் பெயர் பெருந்தேவனார் பாரதம் என்றும் வழங்கப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, பிற்காலத்தில் தோன்றியவர் வில்லிபுத்தூரார் ஆவார். தம் காலத்துச் சிறந்த முறையில் பாரதத்தை வில்லி அளிக்கவே, பாரத வெண்பா போன்ற முந்திய தமிழ் நூல்கள் மக்களால் பெரிதும் விரும்பிக் கற்கப் பெறவில்லை. வில்லிபுத்தூரர் காலம் முதல் வில்லி பாரதமே தமிழுலகில் தலைசிறந்து விளங்கியது (கணபதி,1976:34).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வில்லிபுத்தூரரின் பாடல்களை அங்கங்கே பயன்படுத்திக் கொண்டு பாரதக் கதையை விரிவாகப் பாடிய நல்லாப் பிள்ளை பாரதமும், வில்லியின் நூலைத் தொடர்ந்து பாரதத்தை முற்றுவித்த அரங்கநாத கவிராயர் பாரதமும் வில்லிபாரதத்தைப் போல புலவர் பெருமக்களால் வரவேற்கப் பெறவில்லை (நாராயணவேலுப்பிள்ளை, 1994:17). மேலும், சிலர் பிற்காலத்தில் பாடிய பாரத நூல்கள் சில பெயரளவினால் கூட அறியப்படாது மறைந்து விட்டனவும் உண்டு. இவ்வாறு வில்லிபுத்தூரருக்கு முன்னும் பின்னும் தோன்றிய பாரத நூல்களெல்லாம் சிறந்து போற்றப்படவில்லை. கவிதைப் பெருமையினால் சிறந்து, இன்றும் புலவர் பெருமக்களால் போற்றப்பெற்று வருவது வில்லிபுத்தூரரின் பாரதமே ஆகும் (கணபதி,1976:45).

இவரது பெயரைச் சிறப்புப் பாயிரம் 'வில்லிபுத்தூரன்' என்றும், அரங்கநாத கவிராயர் 'வில்லிபுத்தூராழ்வார்' என்றும் கூறப்படுகிறது. இவர் திருமால் பக்தர் என்பது கொண்டு வில்லிபுத்தூராழ்வார் என்று இக்காலத்தும் சிலர் வழங்குகின்றனர். இவர் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் தோன்றியவர். இவ்வூரில் அந்தணர் குலத்தில், வந்த வைணவராகிய வீரராகவர் என்பவரே இவரின் தந்தையாவார். இவர் இளமையிலே நல்லாசிரியரையடுத்துக்கல்வி கற்று, இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழிலும் மிக வல்லவராய் வடமொழியிலும் மிக்க தேர்ச்சி பெற்றார். சேரசோழபாண்டியர் எனும் தமிழ் நாட்டு மூவேந்தர்களாலும் மிக்க சிறப்புடன் விரும்பியழைக்கப்பட்டு ஆங்காங்குச் சென்று தமது கல்வித் திறத்தைப் பலவகையில் காட்டி அவர்களைக் களிப்பித்து, திருமாலை இரவும் பகலும் எப்பொழுதுந் துதித்துக்கொண்டு, தமிழ்நாடு முழுவதிலும் தமது கல்விப் பெரும்புகழைப் பரவச்செய்து வந்தார் (நாராயணவேலுப்பிள்ளை, 1994:20-25).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


திருமுனைப்பாடிநாட்டிலே வரபதி என்கிற அரசன், இவ்வில்லிபுத்தூராரது கல்வி கேள்வித் திறமைகளைக் கேள்வியுற்று இவரை வரவழைத்துச் சன்மானங்கள் செய்து வியாச முனிவர் அருளிய மகாபாரத்தைச் செந்தமிழ் பாடல்களில் ஒரு காப்பியமாகப் பாடி தரக் கூறினார். அவ்வேண்டுகோளுக்கு இசைந்து சொற்சுவைச் பொருட்சுவைகள் விளங்கும்படி நல்ல நடையிலே இவ்வில்லிபுத்தூரார் நாலாயிரத்து முந்நூற்றுச் பாடல்களைப் பாடினார். வில்லியும் வியாசரைப் போலவே பதினெட்டுப் பருவங்களையும் பாடினர் என்றும் பிற்பகுதி காலவெள்ளத்தில் மறைந்துபட்டது என்றும் சிலர் கருதுகின்றனர் (அருணாச்சலம், 1975:23). ஆக, வில்லி பாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தே இந்த ஆய்வு முழுவதும் அமையப் பெற்றுள்ளது.

### 1.3 ஆய்வு சிக்கல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தற்கால மனிதர்களிடையே அதிகமான ஆளுமைச் சிதைவு ஏற்படுகின்றது. அமெரிக்க உளநோய் மருத்துவக் கழகம் ஆளுமைச் சிதைவு என்பதற்கு வரைவிலக்கணம் கொடுத்துள்ளது. இதன்படி ஆளுமைச் சிதைவு என்பது, ‘இந்நிலையை வெளிப்படுத்தும் ஒருவர் சார்ந்த பண்பாட்டினரின் எதிர்பார்ப்புக்குக் குறிப்பிடத் தக்க அளவு வேறுபாடான, தொடர்ந்திருக்கும் அக அனுபவம் மற்றும் நடத்தைக் கோலம் ஆகும்’ என்கிறார் (லாரன்ஸ்,19990:23). இவற்றின் விளைவாக மனிதன் உடல் ரீதியான நோய்கள், உபாதைகள், வேதனைகள் எனச் சங்கிலித் தொடராய்ச் சந்தித்துக் கொண்டிருக்கும். அதேவேளை, உளவியல் ரீதியான தாக்கத்துக்கும் அதிகளவு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறான். 21 ஆம் நூற்றாண்டில் பல கண்டுபிடிப்புகள், அரிய சாதனைகள் என வெளிவந்து கொண்டிருந்தாலும் இந்த நூற்றாண்டின் முக்கிய நோயாக 'மன அழுத்தம்' இருக்கும் என அண்மைக் கால ஆய்வுகள் கூறுகின்றன. உடல் ரீதியான

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நோய்களுக்கு அடுத்தபடியாக உளவியல் ரீதியான தாக்கத்துக்குள்ளாகி அந்தத் துறையைச் சார்ந்த உள, மன, நல, மருத்துவர்களையே மனிதர்கள் அதிகம் நாடிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது (ஆதி நாராயணன், 1977:23).

இன்று உலகளவில் ஆண்டு தோறும் 10 இலட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். ஒவ்வொரு நாற்பது வினாடிக்கும் ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார். 15 வயது முதல் 24 வயது வரையானவர்களே இவ்வாறு அதிகளவில் தற்கொலை செய்து கொள்கின்றனர் என உலக சுகாதார நிலையம் தெரிவித்துள்ளது. உலகளாவிய ரீதியில் 70 வீதமானவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு மன ரீதியான நோய்க்குச் சிகிச்சை பெறுகின்றனர் என்ற புள்ளி விபரங்களும் வெளியாகியுள்ளன (ஜாம்ஸ்,2016:34-39). மனிதனுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தம், கவலை, தோல்வி, பிரச்சினை, பயம், நீடித்த எதிர்பார்ப்புகள் இவைகளும் தற்கொலைகளுக்குக் காரணமாகின்றன. அமெரிக்காவின் APA ஆய்வின்படி, மனிதர்களுடன் சம்பந்தப்பட்ட 12 உள நோய்கள் பிரதான அங்கம் வகிக்கின்றன எனக் குறிப்பிடப்படுகிறது (எலிஸ், 1936:23).

உளவியல் ரீதியான சிக்கல்கள் ஏற்படக் காரணம், நமது எண்ணங்களின் சுழற்சி முறை, நடைமுறை வாழ்க்கை மற்றும் நம்மைச் சூழவுள்ள சுற்றுச் சூழல்களாகும். சாதாரண நடத்தையுள்ள ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 60,000 எண்ணங்கள் ஏற்படுகின்றன. அதேவேளை, அசாதாரண நடத்தை உள்ள ஒருவருக்கு 90,000 எண்ணங்கள் தோன்றி மறைகின்றன (ஓலிங்வார்த், 1973:109). தனி மனித வாழ்வோ சமூக வாழ்வோ எதுவென்றாலும் எண்ணங்களின் அடிப்படையில்தான் அனைத்தும் அமைகின்றன. பெரும்பாலும் ஒருவன் நியாயமற்ற காரணங்களையும் இல்லாத விடயங்களையும் எண்ணி, எண்ணியே உள்ளத்தை வருத்திக் கொள்வதுடன் வறட்டுக் கௌரவம், பிடிவாதம்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தாழ்வு மனப்பான்மை, சந்தேகம், நம்பிக்கையீனம் போன்றவைகளால் அதிகளவு மன அழுத்தத்துக்கு உள்ளாகிறான் (ஓலிங்வார்த், 1973:120).

இன்றைக்குப் பெரும்பாலும் எல்லா வசதி வாய்ப்புகளும் இருந்தாலும் எண்ணங்கள் வறுமைப்பட்டுப் போய்விட்டன. அளவுக்கு அதிகமான அர்த்தமற்ற எண்ணங்கள் சிந்தனைகளால் உளச்சோர்வுக்கு ஆளாகி குடற்புண், நீரிழிவு, மாரடைப்பு எனச் சிக்கிக் கொள்கிறான். அதுவே மனிதனுக்குப் பல சிக்கல்களைத் தருகின்றன (பெட்போர்டு, 1961:78). ஆக, மனிதனின் வாழ்க்கையில் ஆரோக்கியத்திற்கு முன்னேற்றத்திற்கும் உளவியியல் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

ஜோஸ்வில்சன் கூற்றின்படி உளவியல் என்பது மனிதனின் நடத்தைகளை உற்றுநோக்குவது ஆகும் என்கிறார் (ஜோஸ்வில்சன், 1978:56). வோர்ட்ஸ் ஒர்த் கூற்றின்படி தனிமனிதனின் செயல்பாட்டிற்கும் சூழ்நிலைக்கும் உள்ளதொடர்பை ஆராய்வதாகும் என்கிறார் (வோர்ட்ஸ் ஒர்த், 1967:45). உளவியல் என்பது மனிதனின் நடத்தை மற்றும் மனித உறவு முறைகளைப் பற்றிய படிப்பாகும் என்கிறார் அறிஞர் குரோ (குரோ, 1955:109). இப்படி உளவியல் பற்றி பலர் அறிஞர்கள் தங்கள் கருத்துகளைக் கூறியிருந்தும், பொதுவான நோக்கில் உளவியல் என்பது தனிமனிதனில் நோக்கம், எண்ணங்கள், செய்கைகள், நடவடிக்கைகள், வேட்கைகள், புலணுணர்ச்சி போன்றவற்றை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன் மூலம் அவை, எங்ஙனம் சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே உளவியல் ஆகும் (மீனாட்சிசுந்தரம், 2010:3). அவ்வகையில், ஒருவரின் ஒழுங்கமைந்த, இயங்கியல் பண்புகளும், அவை தோற்றுவிக்கும் நடத்தைகள், உணர்வுகள்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சிந்தனைகளையும் ஆராயப்படுவதே ஆளுமை உளவியல் ஆகும் (மீனாட்சிசுந்தரம், 2010:8).

ஆக, மனிதனின் பல சிக்கல்களுக்கு முதன்மையாக விளங்குவது ஆளுமை உளவியலில் ஏற்படும் குறைப்பாடுகளே ஆகும். அவ்வகையில் இச்சிக்கல்களைக் களைவதற்குப் புராண நூல்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன (மீனாட்சிசுந்தரம், 2010:12). இந்நூல்களில் வரும் கதாபாத்திரங்களின் ஆளுமையை ஆராய்ந்தால் மனிதனின் குணங்களை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். அதிலும் வில்லி பாரதத்தில் கண்ணனின் ஆளுமைப் பண்புகள் பல பரிமாணங்களில் படைக்கப்பட்டுள்ளது. இதன் வழி, மனிதனின் ஆளுமைக்கான காரணத்தையும் அறிந்து அதன் வழி ஏற்படும் சிக்கல்களையும் களையலாம். ஆகவே, இவ்வாய்வு மனிதனுக்கு ஏற்படும் உளவியல் குறைபாடுகளை வில்லி பாரத்தில் வரும் கண்ணனின் பாத்திரத்தின் வழி அறிந்து அதைக் களைவதே ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.4 ஆய்வின் முக்கியத்துவம்

மனிதர்களின் வாழ்வியல் கூறுகளைப் பற்றிய விளக்கத்தை வில்லிபாரதம் நூல் கொடுக்கின்றது (இராமசாமிப்புலவர், 1977:34). இந்த ஆய்வில் முக்கியப் பாத்திரமான கண்ணபிரானின் ஆளுமைப் பண்புகள் ஆராய்வதன் வழி மனிதனின் நடத்தையை அறியலாம். நடத்தை என்பது ஓர் உயிரினத்தின் செயலை அல்லது எதிர்ச் செயலைக் குறிக்கும் (சிவராஜ், 1994:187).

வில்லி பாரதப் பாடல்களில் கண்ணனின் ஆளுமைப் பண்புகள் எய்ஸென்க் கோட்பாட்டின் அடிப்படையின் வழி பொருந்துகின்றனவா என்பதை ஆராய்வதே இந்த ஆய்வின் குறிக்கோள் ஆகும். வில்லி பாரதப் பாடல்களில் கண்ணனின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆளுமைப் பண்புகள் எய்ஸென்க் கோட்பாட்டின் அடிப்படையில் பேசப்படுகின்றனவா என்று ஆராய்வதன் வழி வில்லிபாரத நூல்களும் ஆளுமை உளவியியலுக்கும் உள்ள தொடர்பை அறியலாம்.

இன்றைய சூழலில் மலேசியாவில் தமிழ் மொழியில் உள்ள பல்வேறு துறைகளிலும் பல்வகை ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. எனினும் வில்லி பாரதம், கண்ணன், ஆளுமை உளவியல் என்னும் துறைகளில் ஆய்வுகள் அதிக அளவில் மேற்கொள்ளப்படவில்லை. எய்ஸென்க் கோட்பாடு பற்றி இதுவரை வில்லிபாரதம் அடிப்படையில் எந்த ஓர் ஆய்வும் நிகழ்த்தப்படவில்லை என்பதாலும், 'எய்ஸென்க் கோட்பாடு பற்றி வில்லிபுத்தூரார் எழுதிய வில்லிபாரதத்தில் இடம்பெற்றுள்ள கருத்துக்களை வெளிக்கொணரவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.5 ஆய்வு நோக்கம்

இவ்வாய்வின் நோக்கங்கள் கீழ்க்கண்டவாறு:

1.5.1 வில்லி பாரதத்தின் தனித்தன்மையை அடையாளங்காணுதல்.

1.5.2 வில்லி பாரதப் பாடல்களில் கண்ணனின் ஆளுமைப் பண்புகள் எய்ஸென்க் கோட்பாட்டின் அடிப்படையின் வழி அடையாளங் கண்டு வகைப்படுத்துதல்.

1.5.3 வில்லி பாரதப் பாடல்களில் கண்ணனின் ஆளுமைக்கான காரணிகளை ஆராய்தல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.6 ஆய்வு வினா

இந்த ஆய்வின் குறிப்பிட்ட குறியிலக்கானது கீழே உள்ள ஆய்வு கேள்விகளுக்கு விடை காணலே ஆகும்.

1.6.1 வில்லி பாரத்தின் தனித்தன்மைகள் யாவை?

1.6.2 வில்லி பாரதப் பாடல்களில் எய்ஸென்க் கோட்பாட்டின் அடிப்படையின் கண்ணனின் ஆளுமைப் பண்புகள் யாவை?

1.6.3 வில்லிபாரத்தின் கண்ணனின் ஆளுமைக்கான காரணிகள் யாவை?

### 1.7 ஆய்வின் எல்லை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வில்லிபாரதத்தை இயற்றியவர் வில்லிபுத்தூரார் ஆவர். வில்லிபுத்தூரார் வில்லிபாரதத்தை 10 பருவங்கள் கொண்டு பாடியுள்ளார் (கோபாலகிருஷ்ணமாச்சாரியார், 2013:5).

அட்டவணை 1.1

*வில்லிபாரதம் -10 பருவங்கள்*

| எண் | பருவம் | பாடல்கள் | சருக்கங்கள் |
|---|---|---|---|
| 1 | ஆதி பருவம் | 820 | 8 |
| 2 | சபா பருவம் | 437 | 2 |
| 3 | ஆரணிய பருவம் | 722 | 8 |
| 4 | விராட பருவம் | 326 | 5 |
| 5 | உத்தியோக பருவம் | 396 | 8 |
| 6 | வீட்டும பருவம் | 377 | 10 |
| 7 | துரோண பருவம் | 663 | 5 |
| 8 | கன்ன பருவம் | 360 | 2 |
| 9 | சல்லிய பருவம் | 204 | 1 |
| 10 | சௌப்திக பருவம் | 46 | - |
| மொத்தம் | | 4351 | 49 |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இவற்றில் ஆய்வாளர் ஆதி,சபா, ஆரணிய, உத்தியோக, வீட்டும, துரோண, கன்ன, சௌப்திக பருவங்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன அதாவது கண்ணன் இருக்கும் சருக்கத்தை மட்டும் தேர்ந்தெடுத்தார். மேலும், ஆய்வாளர் வில்லி பாரத்தில் 4351 பாடல்களில் ஆய்வாளர் 600 பாடல்களை ஆய்வுக்கு உட்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, வில்லிபாரத்தில் ஆளுமைப் பண்புகளை ஆராய்வதற்கு ஆய்வாளர் கண்ணன் கதாபாத்திரத்தை மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளார். கண்ணன் அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு நடத்தப்பட்டது.

### 1.8 ஆய்வு ஆதாரம்

#### 1.8.1 முதன்மை ஆதாரம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்த ஆய்வின் முதன்மை ஆதாரமாக வில்லிபாரதம் அமைந்துள்ளது. இந்த ஆய்வு முழுவதும் கோபாலகிருஷ்ணமாச்சிரியார், நாராயண வேலுசாமி அவர்களின் வில்லிபாரதம் மூலமும் தெளிவுரையும் முதன்மைப் பொருளாக வைத்துக் கொண்டு நடத்தப்பட்டது.

#### 1.8.2 துணைமை ஆதாரம்

இந்த ஆய்வுக்குத் தொடர்பான, ‘எய்ஸென்க் கோட்பாடு’ என்ற தலைப்பிலான ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள் ஆகியன துணைமை ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.9 ஆய்வின் முக்கியச் சொற்களின் விளக்கம்

இவ்வாய்வில் காணப்படும் கலைச்சொற்கள், இந்த ஆய்வு நிலையில் கீழ்க்கண்ட பொருளைக் கொண்டு வருகின்றன.

### 1.9.1 வில்லி பாரதம்

பாரதம் காலத்தால் பிற்பட்டதாகும். உலகப் பெரும் இதிகாசங்களுள் பாரதம் அளவில் மிகப் பெரியதாகக் கருதப்படுகிறது. இம்மாபெரும் இதிகாசத்தைத் தமிழில் மூன்று புலவர்கள் பாடியுள்ளனர் (இராமசாமிப்புலவர், 1977:34).

கம்பராமாயணம் தோன்றிய காலத்தையடுத்து ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் தமிழில் பெரிய காவியங்கள் போன்ற சிறந்த நூல்கள் தோன்றவில்லை (இலட்சுமணன், 1964:23). வில்லியார் பிறப்பதற்கு முன்பே தமிழ்நாட்டில் கன்னடர், தெலுங்கர், முதலியோரின் ஆதிக்கம் சிற்சில இடங்களில் தோன்றியது. அதனால் தமிழையோ, தமிழ்ப் புலவர்களையோ ஆதரிப்பார் எவருமிலர் (இலட்சுமணன், 1964:25). வில்லிபுத்தூராரின் பன்மொழிப் புலமையையும், தமிழ்ப் பற்றையும் அறிந்த கொங்கர்கோன் வரபதியாட்கொண்டான் பாரதத்தைத் தமிழில் எழுதுவிக்க கூறினார். எனவே, வரபதியாட்கொண்டானின் விருப்பத்திற்கிணங்க தான்வாழ்ந்த காலத்துத் தமிழ்மொழியின் செய்யுள் நடையை நன்குணர்ந்து விருப்பப்பாவால் பாரத நூலைப் பாடி முடித்தார் (கணபதி, 1988:45).

வில்லிபாரதத்துக்கு முன்னே சங்ககாலப் பாரதமும், பல்லவர் காலத்தில் தோன்றிய பெருந்தேவனார் பாடிய பாரதவெண்பாவும் தமிழ்நாட்டிலிருந்தன. இந்நூல் தோன்றியபின் மேற்குறித்த நூல்களில் பயிற்சி குன்றி அவற்றின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பெரும்பகுதி மறைந்தது (அருணாசலம், 107:32). நல்லாப்பிள்ளை பாரதம், அரங்கநாத கவிராயரின் பாரதம் இவற்றைத் தவிர பாரதக் கதைப்பகுதிகள் செய்யுளால் இயற்றப்பட்ட பலநூல்கள் தோன்றியுள்ளன. இத்தனை நூல்களிலும் வில்லிபாரதத்துக்கே மதிப்பு மிகுதியாகும். (நாராயண வேலுப்பிள்ளை, 2006:5).

வில்லிபுத்தூரார் மிகச் சுருக்கமாகவும் சிறப்பாகவும் தெளிவாகவும் பத்துப் பருவங்களில் பாடி முடித்துள்ளார். இவர் அமைத்துள்ள இந்நூல் சிறப்பை வைத்து இதை வில்லி பாரதம் என்று அழைத்தனர். இன்றும் புலவர் பெருமக்களால் போற்றப்பெற்று வருவது வில்லிபுத்தூரரின் பாரதம் ஒன்றே (நாராயண வேலுப்பிள்ளை, 2006:5).

### 1.9.2 ஆளுமை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உளவியல் நோக்கில் ஆளுமை என்பது ஒருவரின் ஒழுங்கமைந்த, இயங்கியல் பண்புகளும், அவை தோற்றுவிக்கும் தோரண நடத்தைகள், உணர்வுகள், சிந்தனைகளையும் குறிக்கிறது (அப்துல்கரீம், 1975:40). பொது வழக்கில் ஆளுமை என்பது ஒருவரின் வெளித் தோற்றத்தைப் பெரிதும் குறிக்கிறது. ஆளுமை என்பதைச் சுருக்கமாக ‘ஒருவரைத் தனித்துவமானவராக ஆக்கும் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் என்பவற்றாலான ஒன்று’ என வரையறுக்கலாம். அத்துடன் ஆளுமை ஒருவரின் உள்ளிருந்து உருவாகி அவருடைய வாழ்க்கைக் காலம் முழுவதும் சீராக அமைகின்றது (அப்துல்கரீம், 1975:46).

ஆங்கிலத்தில் ஆளுமையைக் குறிக்கும் "பர்சனாலிட்டி" (Personality) என்னும் சொல், இலத்தீன் மொழியில் "பர்சனா" (Persona) என்ற சொல்லிருந்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பிறந்தது இலத்தீன் மொழியில் "பர்சனா" என்பது 'முகமூடி' என்னும் பொருள் தருகின்றது (மூன். நோர்மன், 1967:671). PERSONALITY என்ற ஆங்கிலச் சொல்லில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் ஆளுமையைக் குறிக்கின்றது.

P என்பது புலன்காட்சியை அறியும் ஆற்றலையும்
E என்பது மனவெழுச்சியின் முதிர்ச்சியையும்
R என்பது சூழ்நிலைக்கேற்ற இணக்கத்தையும்
S என்பது சமூக உறவு பற்றியும்
O என்பது உண்மையையும்
N என்பது நடுநிலையையும்
A என்பது வெளித்தோற்றத்தையும்
L என்பது தலைமைப் பண்பையும்
I என்பது ஒருங்கிணைந்த பண்புகளையும்
T என்பது மனோபாவத்தையும்
Y என்பது இளமையையும் குறிக்கும் (மீனாட்சிசுந்தரம், 2010:351-352).

ஆளுமை என்பது ஒருவரின் ஒழுங்கமைந்த, இயங்கியல் பண்புகளும், அவை தோற்றுவிக்கும் நடத்தைகள், உணர்வுகள், சிந்தனைகளையும் குறிக்கிறது (சுப்புரெட்டியார், 1989:56).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆளுமையின் அமைப்பையும், வளர்ச்சியையும் ஆராய்ந்திட பல்வேறுபட்ட சிந்தனைக் குழுக்கள் கோட்பாடுகளை உருவாக்கத்துக்குக் காரணமாக இருந்தனர். ஆளுமை குறித்த முக்கியக் கோட்பாட்டு வகைகளாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. வகையியல் கோட்பாடுகள் (Typology)

இக்கோட்பாடுகள் ஒரு குறிக்கப்பட்ட எண்ணிக்கையான ஆளுமை வகைகளே உள்ளதாகக் குறிப்பிடுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


2. உளப்பண்புகள் கோட்பாடுகள் (Traits)

இக்கோட்பாடுகள் ஆளுமையை, மரபியல் அடிப்படையிலான உள்ளார்ந்த இயல்புகளின் விளைவாக நோக்கின.

3. உளப்பகுப்பாய்வுக் கோட்பாடுகள் (Psycho-Analytic)

இவை ஆளுமை மீது நனவிலித் தன்மையின் செல்வாக்குக்கு அதிக அழுத்தம் கொடுத்தன.

4. நடத்தைக் கோட்பாடுகள் (Behavior)

தனியாளுக்கும், சூழலுக்கும் இடையிலான இடைவினைகளின் விளைவே ஆளுமை என இக்கோட்பாடுகள் கருதுகின்றன.

5. மனிதவியல் கோட்பாடுகள் (Humanistic Theory)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இக்கோட்பாடுகள், ஆளுமையின் உருவாக்கத்தில் கட்டற்ற தன்விருப்பு, தனிமனிதப் பட்டறிவு என்பவற்றுக்கு அழுத்தம் கொடுக்கின்றன (நாகராஜன். சீத்தராமன், 2012:345).

ஆளுமையின் அடிப்படையாக அமையும் சில இயல்புகள் இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன:

- சீராக இருத்தல் - தனியாட்களின் நடத்தையில் ஒழுங்கும் சீர்த்தன்மையும் காணப்படுகின்றது. குறிப்பாகப் பல்வேறு நிலைமைகளில் ஒரே மாதிரியாகவே ஒருவர் செயல்படுவதும் தெரிகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


- உளவியல், உடலியல் என்பவை சார்ந்து அமைதல் - ஆளுமை என்பது ஓர் உளவியல் உருவாக்கம் ஆகும். எனினும், உடலியல் செயல்முறைகள், தேவைகள் என்பவையும் இதைப் பாதிப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன.

- நடத்தைகளையும், செயல்களையும் பாதித்தல் - ஆளுமை என்பது ஒருவர் எவ்வாறு சூழலுக்கு ஏற்ப நடந்துகொள்கிறார் என்பது மட்டுமன்றி, ஒரு குறிப்பிட்ட முறையில் அவர் நடந்துகொள்வதற்கும் காரணமாக அமைகின்றது.

- பன்முக வெளிப்பாடு - ஆளுமை என்பது ஒருவருடைய நடத்தை மூலம் மட்டும் வெளிப்படுவதில்லை. அது, அவருடைய எண்ணங்கள், உணர்வுகள், நெருக்கமான உறவுகள், பிற சமூகத் தொடர்பாடல்கள் போன்றவற்றிலும் வெளிப்படுகின்றது.

(சரஸ்வதி, 2000:23-26)

ஆளுமைச் சிதைவு (Personality disorder) என்பது, சமகாலச் சமூகத்தின் பொதுவான எதிர்பார்ப்பில் இருந்து விலகிக் காணப்படும் ஆளுமை வகைகளில் ஒன்றாகும். ஆளுமைச் சிதைவு தொடர்பான நோயறிமுறைகள் பெரிதும் தற்சார்பு கொண்டவையாக உள்ளன (சோமசுந்தர், 1981:56). எனினும் வளைந்து கொடுக்காத, தவறான நடத்தைக் கோலங்களும், பொதுவான செயற்பாட்டுக் குறைபாடுகளும், பெரும்பாலும், தனிப்பட்ட மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைகின்றன. அமெரிக்க உளநோய் மருத்துவக் கழகம் ஆளுமைச் சிதைவு என்பதற்குப் வரைவிலக்கணம் கொடுத்துள்ளது. இதன்படி ஆளுமைச் சிதைவு என்பது, இந்நிலையை வெளிப்படுத்தும் ஒருவர் சார்ந்த பண்பாட்டினரின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


எதிர்பார்ப்புக்குக் குறிப்பிடத் தக்க அளவு வேறுபாடான, தொடர்ந்திருக்கும் அக அனுபவம் மற்றும் நடத்தைக் கோலம் ஆகும்' (கோலெமன், 1971:45).

### 1.9.3 கண்ணன்

திருமால் இவ்வுலகில் தோன்றி மானிடர்களுக்கு அருளுவது அவதாரம் எனப்படும். அவதாரம் என்பதற்கு 'இறங்கி வருதல்' என்பது பொருள். இறைத்தன்மையுடன் கூடிய சக்தி இறங்கி வந்து இவ்வுலக மாந்தர்களுக்குப் பயன்படும் விதத்தில் அமைவது என்பதே அவதாரமாகும் (அனுமந்தன், 2010:34). அவதாரம் என்பது இறைவன் தானும் பல உருவங்களை எடுத்துக் கொண்டு பல பெயர்களில் பிறப்பதாகும். கருணை காரணமாக எடுக்கப்படும் அவதாரங்கள் உயிர்வர்க்கத்தைப் பாதுகாக்கவும், நல்வழிப்படுத்தவும் தோன்றியவை. கடவுளின் கருணை அவரை விண்ணிலிருந்து மண்ணிற்கு இறங்கச் செய்கிறது (சீனிவாசன், 2010:78).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இருக்குவேதத்தில் விட்டுணு மூன்றடியால் இவ்வுலகளந்தமை உரைக்கப் பெறுகிறது. எனவே, அவதாரத்தின் பழமை நன்கு விளங்கும். நெருப்பினின்று பொறி கிளம்புவதுபோலப் பகவானிடமிருந்து அவதாரங்கள் உண்டாகின்றன என்று ஆகமம் கூறுகின்றது (அனுமந்தன், 2010:56). எல்லா அவதாரங்களும் அநிருத்தனிடமிருந்தே உண்டாயின என்று விச்வசேந சம்ஷிதை கூறுகிறது. ஆனால் பாத்ம சமஹிதை மத்யம், கூர்மம், வராகம் இவை வாசுதேவனிடம் இருந்தும் நரசிம்மம், வாமணன், ராம, பரசுராமன், இவை சங்கர்ஷணனிடமிருந்தும், பலராமன் பிரத்யும்நனிடமிருந்தும், கிருஷ்ணன், கல்கி, விருஷங்கள் இவை அநிருத்தனிடமிருந்தும் உண்டான அவதாரங்கள் என்று கூறுகிறது (அக்னிஹோத்திரம் இராமானுச தாத்தாச்சாரியார், 1973:147).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


திருமாலில் அவதாரங்கள் முப்பத்தொன்பதாகும். அவற்றுள் சிறப்பான பத்து அவதாரங்களும் அடங்கும். மச்சம் தொடங்கிக் கல்கி முடிய அமையும் அவதாரங்களில் நான்கு விலங்கு வகையின. ஒன்று விலங்காயும், மனிதராயும் அமைவது ஆகும். எஞ்சிய ஐந்தும் மானுடவடிவுடன் கூடியவை (தேவராஜன், 1991:89). அவதாரங்களைப் பற்றிய செய்தியை ஆகமங்கள் முதலில் கூறுவதாகக் கொள்ளலாம்.

சுக்கில எசுர்வேதத்தில் உள்ள புருட சூக்தத்தில் இரண்டாம் அனுவாகத்தில் 'பிறக்காதவன் பிறக்கிறான்' என்ற கருத்துக் காணப்படுகிறது. யூபத்தில் கயிறு கட்டும்போது சொல்லப்பெறும் திருமாலைக் குறிக்கும் மந்திரம் ஒன்று அவன் பிறந்துகொண்டு பெருமையை அடைகிறான் எனக் கூறுகிறது. ஆதலில் வேதத்தில் கூறப்படும் தெய்வக் கொள்ளையின்படி அவதாரம் உண்டு என்றாகிறது (அக்னிஹோத்திரம் இராமானுச தாத்தாச்சாரியார், 1973:125-126). எனவே, அவதாரங்களைப் பற்றி மூவகை நிலைப்பாடு வடமொழி நூல்களில் அமைந்துள்ளமை கருதத்தக்கது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருமாலின் பத்து அவதாரங்களுள் முக்கியம், கௌணம் என இருவகைப்படும். முக்கியம் என்பது இறைவனின் நேரடி அவதாரமாகும், இராமன், கண்ணன், அவதாரமாகும். கௌணம் என்பது ஆவேச அவதாரமாகும் (வச்சிரவேல் முதலியார், 1976:78). முக்கிய அவதாரங்கள் மூவகையாகக் கொள்ளப்படும். அவை, மனிடத்துவம், திரியக்துவம், சுதாரத்துவம் என்பன. மானிடத்துவம் என்ப இராமன், கண்ணன், வாமன அவதாரங்களைக் குறிக்கும். சதாரத்துவம் என்பது திருப்புளியாழ்வான் போன்ற செடி, கொடி வகைகளைக் குறிக்கும். முக்கிய அவதாரங்கள், ஆவேச அவதாரங்கள் இரண்டிற்கும் காரணமாய்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



அமைவது இறைவனின் இச்சையேயாகும் (இராமானுச தாத்தாச்சாரியார், 1973:130).

பழம்பெரும் இதிகாசங்களை இராமாயணமும், மகாபாரதமும் ஆகும். திருமால் இராமனாக அவதரித்து மானிடர்க்குரிய வாழ்வியல் அனுபவங்களைப் பிரதிபலித்துக் கடைபிடிக்க வேண்டிய அறங்களைக் காட்டியருளினான். இராமாவதாரத்தில் இராவணவதம் என்கிற அவதார நோக்கம் நிறைவேறுகிறது. இராமாவதாரத்தில் இராமன் துயருற்றும் அனைவரையும் துயருறச் செய்தது (வரதராசன், 1983:109). மகாபாரதக் கண்ணன் அவதாரம் பூபாரம் தீர்க்கும் நோக்கம் உடையது. கண்ணன் எளிவந்த தன்மையனாய் இருந்து மூலகாரணமாக அமைந்து செயல்களின் வழி அவனை அடையும் உபாயம் கூறப்படுகிறது. இராமாவதாரத்தில் இறுதியில் இராமன் அனைவருக்கும் மோட்சமருளுகின்றான். கண்ணன் அவதாரத்தில் கண்ணனோ வாழும்போதே கோபியர், ஆயர்களுடன் வாழ்ந்து மகிழ்ச்சியளித்தான். இராமாவதாரம் அடியவர்க்கு விருட்சமாக அமைந்து நிழல் தருகிறது. கண்ணன் அவதாரமோ அடியவர் மனதை முழுமையும் ஆட்கொண்டு பேரின்பமளிக்கிறது (வரதராசன், 1983:115).

திருமாலின் பத்து அவதாரங்களுள் மச்சம், கூர்மம், வராகம் முதலான அவதாரங்கள் ஒருகாலத்தில் உடம்தோன்றி மறைந்துவிட்டவை. ஆனால், இராமன், கண்ணன் அவதாரங்கள் இதிகாசங்களில் உயிரோட்டமாய் அமைந்து இன்றும் வாழ்வியல் நெறிகளை விளங்குவனவாக அமைந்து சிறக்கின்றன (வேந்தாத தேசிகர், 1997:56).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கண்ணன் அவதாரத்துள் பாலபருவலீலைகள் கதையோட்டத்தில் இடம்பெறவில்லை. ஆனால் இறைவனைத் துதிக்கும் முகமாகவும், போற்றும்விதமாகவும் அமைந்துள்ள பாடல்களில் இடம்பெற்றுச் சிறக்கின்றன. பாரதக்கதையில் இடம்பெறும் கண்ணன் அவதாரம் கதையோட்டத்தோடு ஒன்றிணைந்து, அவனது அருளிச் செயல்கள் யாவும் அவதார நோக்கத்தை முன்னிறுத்துவன. அடியவர்க்கு வேண்டுவன செய்யும், தன்னையே அருளும் ஒப்பற்ற அருட்திறமும், அடியரல்லாதார்க்கு வினைக்கேற்ற விளைவை நல்கி அழிக்கும் பேராற்றலும், இவ்வவதாரத்தில் பொலிந்து சிறக்கின்றன. அறத்தின் வழியில் விளங்கும் பாண்டவர்களைக் கருவியாகக் கொண்டு, அசித்தின் பிடியில் சிக்குண்டு அறமல்லா வழியில் பேராசையில் வாய்ப்பட்டுத் தீயன் செய்யும் துரியோதனை அழிக்கும் நோக்கத்தை நிறைவேற்றுகின்றான் கண்ணன் (கிருஷ்ணன், 2008:1).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வில்லிபாரதத்தில் பாத்திரப்படைப்புகளுள் ஒன்றாக அமைவது கண்ணன் அவதாரம். பாரதக் கதையில் புவியாள்வது குறித்து ஆலோசனை செய்வதற்காகத் தேவகியும், பலராமனும், கண்ணனும் குந்தியை வந்து காண்கின்றனர். கண்ணன் பாத்திரப் படைப்பு இங்கு அறிமுகமாகி கதையின் இறுதிவரை தொடர்கின்றது.

*எம்பிரான் ஆதி மூலம் இந்திரன் முதலோர்க்கும் எல்லாம்*
*தம்பிரான் பாண்டு ஈன்ற தருமதே வதையை நோக்கி*
*அம்புர சிகளுட் பட்ட அவனிகள் அனைத்தும் நாமே*
*இம்பர்நோய் அகற்றி எல்லா எண்ணமும் முடித்தும் என்றான்.*

*(ஆதி.,பா.292)*

பூமி முழுவதையும் பற்றி வரக்கூடிய துன்பத்தைப் போக்கி எல்லா எண்ணத்தையும், நாமே தீத்துவைப்போம் என்று கண்ணன் தருமனிடம் கூறுகின்றவிடத்தில் தருமனைக் கருவியாகக் கொண்டு நான்வந்த காரியத்தை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


முடிப்பேன் என்று குறிப்பாக அவதார நோக்கத்தை வெளிப்படுத்துகிறான்.

*இந்தக் குரிசில் யதுகுலத்துக்கு எல்லாம் திலகம் எனுமாறு*
*வந்து உற் பவித்துப் பொதுவருடன் வளரும் கள்ள மாமாயன்*
*முந்தக் கஞ்சன் மாமன் உயிர் முடித்தான்*

*(ஆதி.,பா.539)*

என்று திரௌபதி மாலையிட்ட சருக்கத்தில் அரசர்கள் அறிமுகத்தில் கண்ணனின் சிறப்பும், பெருமையும் சுட்டப்படுகின்றன.

*மனுமுறைக்கு வரம்பாகி வருத்தம்வீடா மாநிலம் மீது அவதரிக்க வாசுதேவன்*

*(ஆதி.,பா.547)*

பூமியின்மேல் பூமாதேவியின் துன்பம் நீங்க அவதரித்த கண்ணன் என்று வில்லிபுத்தூராழ்வாரும் அவதார நோக்கத்தைத் தன் கருத்தாக எடுத்து மொழிகிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.10 தொகுப்புரை

இந்த இயல் இவ்வாய்வைப் பற்றிய அறிமுகமாக அமைந்துள்ளது. ஆய்வின் பின்னணி, சிக்கல், முக்கியத்துவம், நோக்கம், வினாக்கள், எல்லை, மூலம் மற்றும் ஆய்வின் தலைப்பில் காணப்படும் முக்கியக் கலைச் சொற்கள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi